OCT 2023
கலைஞர் 100
எழிலகம், சென்னை-600 005.
1924 - 2023

D/copy
ஆணையர் (மாநில வரி) அலுவலகம்
23 NOV 2023
திருவண்ணாமலை-606 604

## சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – வேலூர் கோட்டம் – செல்வி. கா.குணஸ்ரீ என்பவர் கருணையடிப்படையில் 13.04.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

**வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை**

**அரசாணை (ப) எண்.314**

**நாள்: 13.10.2023**
**சோபகிருது , புரட்டாசி–26,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2054**

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. வேலூர் கோட்ட இணை ஆணையரின் (மா.வ) செயல்முறைகள் ந.க. எண்.அ2/10653/2022, நாள் 05.04.2023.
3. வணிகவரி ஆணையரின் கடித எண்.ஒய்–3/4847148/ 2023, நாள் 03.07.2023.

*****

ஆணை:

வணிகவரித் துறையில், வேலூர் வணிகவரி கோட்டம், திருவண்ணாமலை துணை ஆணையர் (மா.வ) அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்தபோது 21.05.2021 அன்று பணியிடை மரணமடைந்த திரு. பெ.காந்தி என்பவரின் மகள் செல்வி. கா.குணஸ்ரீ என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 13.10.2021 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், விண்ணப்பம் அரசு ஊழியர் இறந்த நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் பெறப்பட்டுள்ளது என்றும், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து சான்றுகள்/ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில், மறைந்த அரசு ஊழியரின் மகள் செல்வி. கா.குணஸ்ரீ என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார் என்பதால் இளநிலை உதவியாளர் பணி நியமனம் பெற தகுதியானவர் எனவும், இதன் காரணமாக மனுதாரரின் கோரிக்கை நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி பரிசீலனை செய்யப்பட்டு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின்படி செல்வி. கா.குணஸ்ரீ என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதன் தொடர்ச்சியாக, தனியர் 13.04.2023 முற்பகல் முதல் திருவண்ணாமலை துணை ஆணையர் (மா.வ) அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து

வருவதாகவும், தனியர் பணியில் சேர்ந்த நாளான 13.04.2023 முற்பகல் முதல் தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பணித்தரத்தில், வரன்முறை செய்து ஆணை வழங்குமாறும் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் வணிகவரி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. வணிகவரி ஆணையரின் கருத்துருவை மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசு கவனமுடன் ஆய்வு செய்து, வணிகவரித் துறையில், வேலூர் வணிகவரி கோட்டம், திருவண்ணாமலை துணை ஆணையர் (மா.வ) அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்தபோது 21.05.2021 அன்று பணியிடை மரணமடைந்த திரு. பெ.காந்தி என்பவரின் மகள் செல்வி. கா.குணஸ்ரீ என்பவருக்கு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், வணிகவரித் துறையில், திருவண்ணாமலை துணை ஆணையர் (மா.வ) அலுவலகத்தில் கருணை அடிப்படையில் வழங்கப்பட்ட இளநிலை உதவியாளர் பணியை தனியர் பணியில் சேர்ந்த நாளான 13.04.2023 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறைப் படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

(**ஆளுநரின் ஆணைப்படி**)

பா.ஜோதி நிர்மலாசாமி
**அரசு செயலாளர்**

<u>பெறுநர்</u>:
செல்வி. கா.குணஸ்ரீ, இளநிலை உதவியாளர்,
இணை ஆணையர் (மா.வ), திருவண்ணாமலை, வேலூர் கோட்டம்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக)
முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக)

<u>நகல்:</u>
இணை ஆணையர் (மா.வ), வேலூர் கோட்டம்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக).
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை – 9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை – 9.
அரசு செயலாளரின் தனிச் செயலர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/10/2023
பிரிவு அலுவலர்

13/10/23